1981 ஆகஸ்ட் 24]

கோவை நகரத்திலுள்ள வக்ஃபு பாதுகாப்புப் பேரவையிடமிருந்து பெறப்பெற்ற மகஜர்.

*வினா எண் 35—திரு. கு. ரமணி: மாண்புமிகு நீர்ப் பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) கோவை நகரத்தில் உள்ள வக்.'.பு பாதுகாப்புப் பேரவை என்ற ஸ்தாபனத்தின் சார்பில் அரசுக்கு 1981 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 4 ஆம் தேதியிட்ட மகஜர் ஒன்று வரப்பெற் றுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அம் மகஜரில் கூறப்பட்டுள்ள வக்.'.பு சொத்துக்களைப் பாதுகாக்க அரசு என்ன நடவடிக்கை எடுத் துள்ளது ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) ஆம்.

(ஆ) மனுவில் கண்டுள்ள சொத்துக்கள் வக்ஃபு சொத்துக் கள்தானா அல்லது இல்லையா என்பது பற்றிய வழக்கு ஒன்று நீதி மன்றத்தில் நிலுவையில் உள்ளது. இந்நிலையில் அரசு மேற் கொண்டு நடவடிக்கை எடுக்க வாய்ப்பில்லை.

கோமுகி அணையினை விரிவுபடுத்தும் திட்டம்

*வினா எண் 36—திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை ளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டத் தில் உள்ள கோமுகி அணையில் நீர்வரத்து அதிகம் இருப்பதால், எதிர்கால நன்மை கருதி அணையினை விரிவுபடுத்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) மற்றும் (ஆ) கோமுகி நீர்த் தேக்கத்தின் மேல் மட்டத்தை உயர்த்தி, கொள் ளளவை அதிகப்படுத்தும் திட்டம் தல அதிகாரிகளின் ஆய்வில் உள்ளது.

திரு. ஆர். தியாகராசன்: மரியாதைக்குரிய பேரவைத் தலை வர் அவர்களே, கள்ளக்குறிச்சி பகுதியில் அதிக நீர் வந்து கொண் டிருக்கிறது. ஏற்கனவே, அதற்குக் கீழேயுள்ள விருத்தாச்சலம்,